**இழப்பீட்டுக்கான அலுவலகம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 70 இன் பிரகாரம், நிறுவனம் அதன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புகள் நிதிநிலைமை கூற்றின் முகப்பில் தனித்தனியாக வகைப்படுத்தல் வேண்டும். இருப்பினும், ஒருங்கிணைந்த கடனுதவித் திட்டத்தின் கீழ் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு, முதிர்ச்சியடைந்த பின் திறைசேரிக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 122,432,713 ஆனது நடைமுறையல்லா பொறுப்புகளின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்தது. இதில் அடுத்த ஆண்டில் முதிர்ச்சியடைய வேண்டிய ரூபா 67,500,000 பெறுமதியான முதலீடுகளை நடைமுறைப் பொறுப்புகளாக அடையாளம் காணத் தவறியதால், நடைமுறை பொறுப்புகள் குறைவாகவும் மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புகள் அதே பெறுமதியால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டின் நிதிநிலைமை கூற்றினை சமர்ப்பிக்கும்போது ஏற்பட்ட இந்தக் குறைபாட்டை 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 70 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 இன் பிரகாரம், ஒரு சொத்தின் மீதியுடை பெறுமதியும் மற்றும் பயனுள்ள ஆயுட்காலமும் குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். மேலும், எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலைகள் மதிப்பீடுகளிலிருந்து மாறுபடுமாயின், அந்த மாற்றம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகளின் | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் இந்தக் குறைபாட்டிற்கான வெளிப்படுத்தலை மேற்கொள்ள நான் குறித்துக் கொண்டேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 இன் பிரகாரம் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றமாக கணக்கு வைக்கப்பட வேண்டும். ஆயினும், இழப்பீட்டுகான அலுவலகத்தினால் 2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்தும், தொடர்ந்து பயன்படுத்தப்படும் ரூபா 823,515 கிரயமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பில் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட்ட ரூபா 10,819,625 பெறுமதியான கணினித் தரவு கட்டமைப்பு, 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாக அடையாளம் காணப்படவில்லை. அத்துடன், 2023 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 735,141 காலக்கழிவுத் தொகை 2024 ஆம் ஆண்டில் ஒரு செலவாக அடையாளம் காணப்பட்டதால், நடப்பு ஆண்டுக்கான பற்றாக்குறை அந்த பெறுமதியால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது. | சொத்துக்களை சரியாகக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சர்வதேச குடியேற்ற அமைப்பினால் (IOM) சமூக அடிப்படையிலான நுண் திட்டங்களை நிறுவுவதற்காக 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 20,916,444 ஆனது, அலுவலகத்தின் மீண்டெழும் மானியமாக அடையாளம் காணப்படாமல், சர்வதேச குடியேற்ற அமைப்பு நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது. | மீண்டெழும் மானியங்களைச் சரியாகக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2024 ஆம் ஆண்டுக்கான சமூக அடிப்படையிலான நுண் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 12,787,722 ஆனது, அந்த ஆண்டின் செலவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் அடையாளம் காணப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டுக்காக ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட செலவை, 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் நிதிச் செயலாற்றுகை கூற்றின மீள்-அறிக்கையிடல் மூலம் சீரமைக்க நான் குறித்துக் | மீளாய்வாண்டுக்குரிய செலவுகளைச் சரியாகக் கணக்கில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கொண்டேன். அத்துடன், எதிர்காலத்தில் பெறப்படும் இவ்வாறான மானியங்களைக் கணக்கு வைக்கும்போது, உங்களது கவனிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி செயற்படுவேன்.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 272(1) ஆம் பந்தி | பணம் செலுத்தப்பட்ட அனைத்து வவுச்சர்களும் நடவடிக்கை எடுக்கும் வரை அவற்றின் வரிசை எண்ணின்படி ஒழுங்குபடுத்தப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். மேலும், ஆவணங்களைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் அவற்றை அங்கீகாரமற்ற நபர்களின் கைகளில் அகப்படாமல் பாதுகாப்பாகப் பேண வேண்டும். ஆனால், இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் சர்வதேச குடியேற்ற அமைப்பிடமிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட செலவுகளுக்கான வவுச்சர்கள் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை. | பணம் செலுத்தப்பட்ட அனைத்து வவுச்சர்களையும் முறையாக ஒழுங்குபடுத்தி, நிதிப்பிரமாணம் 272(1) இன் பிரகாரம் பாதுகாப்பாகப் பேண எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | | | |
| | (i) 9(ஆ) ஆம் பந்தி | அலுவலகத்தின் சில பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஒன்று சேர்ந்து, ரூபா 100,000 | இந்த அனைத்துத் நிகழ்ச்சித்திட்டங்களும் கொழும்பிற்கு வெளியே, | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இற்கு அதிகமாகத் தற்காலிக செயல்நிமித்த கட்டுநிதிகளை 08 சந்தர்ப்பங்களில் பிரித்துக் கடனாகப் பெற்று, ரூபா 2,377,480 பணத்தைச் செலவிட்டுள்ளனர். | வடகிழக்கில் உள்ள பாதிக்கப்பட்டுள்ள சமூகக் குழுக்களுக்கான நட்டஈட்டுக்களைப் பற்றியதாகும்.<br><br>கூட்டு நட்டஈடுகளை வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முற்பணங்கள் பிரித்துக் கொண்டு, வடகிழக்குப் பகுதிக்குச் சென்று உரிய பணிகளைச் செய்கிறார்கள். மேலும், ரூபா 100,000 இற்கு அதிகமாக எந்தவொரு உத்தியோகத்தருக்கும் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்படவில்லை. | செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 11.1 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 756(6) | பொருள் மெய்மையாய்வுப் பணிகள் 2025 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டு, அந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், அதன்படி செயற்படவில்லை. | 2024 ஆம் ஆண்டுக்கான பொருட்களின் மெய்மையாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு, பொருட்களின் மெய்மையாய்வு அறிக்கைகள் அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபருக்கும் அனுப்பத் தயாராக உள்ளன. | நிதிப்பிரமாணங்களின் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிறுவனத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பட்டோலை 1 இன் 3 ஆம் பந்தி | முன்கணிக்கப்பட்ட வருமான அறிக்கை, முன்கணிக்கப்பட்ட நிதிநிலைமை அறிக்கை மற்றும் முன்கணிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் அறிக்கை ஆகியவை பிரதான வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவை 2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் வரவுசெலவுத் திட்டத்துடன் முன்கணிக்கப்பட்ட வருமான அறிக்கை, நிதிநிலைமை அறிக்கை மற்றும் காசுப்பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | இலக்கம் 01/2021 கொண்ட அரச சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தி | குறைந்தது 03 வருட காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கிய பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இருப்பினும், அத்தகைய திட்டம் தயாரிக்கப்படவில்லை. | இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் தற்போது சிறு பெறுகைகள் குழுவே உள்ளது. எதிர்காலத்தில் 3 வருடங்களுக்கான பெறுகைகள் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் 6 ஆம் பந்தி மற்றும் 2018 யூலை 16 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் 05(இ)ii(ஊ) ஆம் பந்தி | செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் பெறப்பட்ட மோட்டார் வாகனத்துக்காக, 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை, வாகனத்தை வழங்கிய நிறுவனத்திற்கும் இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கும் இடையில் எந்தவொரு எழுத்துமூல ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படாமல் அந்த மோட்டார் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத் தலைவி அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக WP CAW – 0173 ரக கார் குத்தகை முறைமையின் கீழ் 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், நிலவும் விலைகளுக்கு அமைய விநியோகஸ்தர் நிறுவனம் | வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வாகனத்தை வழங்க மறுத்துள்ளது. அதன்படி, 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு 2023 நவம்பர் 09 ஆம் திகதியிடப்பட்ட பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒப்பந்தப் பிரதிகளை கையொப்பமிடத் தவறிவிட்டோம். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,276,563 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,642,455 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 12,365,892 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த நட்டஈட்டுக்காக திறைசேரியின் கட்டுநிதி வருமானம் அதிகரித்தமை மற்றும் மூலதன மானியங்களின் அதிகரிப்பு என்பன முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2024 வரவுசெலவுத் திட்டத்தில், ஏனைய நட்டஈட்டு மானியங்கள் திட்டங்களின் கீழ் திட்டமிடப்பட்ட 4 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 17 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றின் முன்னேற்றத்தைச் சோதித்தபோது, ஒதுக்கப்பட்ட நிதியில் 73 வீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | 2024 வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், ஏனைய நட்டஈடுகளாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வாழ்வாதார மேம்படுத்தல், உள சமூக ஆதரவு, நிர்வாக ஆதரவு மற்றும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் வாழ்வாதார மற்றும் உள சமூக ஆதரவு நிகழ்ச்சிகள் வெளிநாட்டு உதவி மானியங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன. | வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைச் சரியாகத் தயாரித்து, நிதி ஒதுக்கீடுகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மீதமுள்ள பணம், போரினால் சொத்துக்கள் இழந்தவர்களுக்கு நிதி நிவாரணம் வழங்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், மரணம் மற்றும் காயங்கள் தொடர்பான 3,495 கோப்புகளுக்கு நட்டஈட்டுத் தொகையாக ரூபா 698,860,000 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், சாதாரண பொது நட்டஈட்டுக் கட்டமைப்பின் கீழ் 33 கோப்புகளுக்கு ரூபா 6,185,000 நட்டஈடு செலுத்தப்பட வேண்டியிருந்தது. இந்தக் காலப்பகுப்பாய்வின்படி, 1 முதல் 5 வருடங்கள் பழைமையான 23 கோப்புகளும், 5 முதல் 10 வருடங்கள் பழைமையான 10 கோப்புகளும் இருந்தன. எனவே, நட்டஈடு வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதம் காணப்பட்டது. | கொடுப்பனவுகளுக்கு அத்தியாவசியமான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக, சாதாரண பொது நட்டஈடு – மரணம் மற்றும் காயங்களுக்கான 33 கோப்புகள் நிறுவனத்திடம் உள்ளன. அந்தக் கோப்புகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் தகவல்கள் கோரப்பட்ட போதிலும், பதில் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட கோப்புகள் இறந்த நபர்களின் கோப்புகள் என்பதால், பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்குவது அவசியமாகும். எனவே, அந்தக் கோப்புகள் பேணப்படுகின்றன. இருப்பினும், எதிர்காலத்தில் பயனாளிகள் பதிலளிக்கத் தவறினால், அந்தக் கோப்புகளை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கோப்புகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், சொத்துக்களுக்கான நட்டஈட்டுக் கட்டமைப்பின் கீழ் 7,459 கோப்புகளுக்கு ரூபா 924,184,606 சொத்து நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது. மேலும், அந்தக் கட்டமைப்புக்குக் கீழ் சாதாரண பொதுச் சொத்துகளுக்காக 3,060 கோப்புகளுக்கு நட்டஈடு செலுத்தப்பட வேண்டியிருந்தது. அந்தக் கோப்புகள் அனைத்தும் 10 வருடங்களுக்கும் மேலாகப் பழைமையான கோப்புகளாகும். | 2,425 சொத்து நட்டஈட்டுக் கோப்புகள், அத்தியாவசிய ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமல் நிறுவனத்திடம் உள்ளன. பல சந்தர்ப்பங்களில் தகவல்கள் கோரப்பட்ட போதிலும், அதற்குப் பதில் கிடைக்கவில்லை. மேலும், 553 வழிபாட்டுத் தலங்களுக்கான கோப்புகளுக்கு அந்தப் பிரிவின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையின் காரணமாக நிறுவனத்திடம் நிலுவையில் உள்ளன. இந்தக் கோப்புகளின் ஆவணங்கள் முழுமையற்றதாக | நட்டஈட்டுக் கோப்புகள் தொடர்பான ஆவணங்களை விரைவாகப் பூர்த்தி செய்து நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருப்பதால், செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பிட முடியவில்லை. அரச ஊழியர்களின் சொத்து நட்டஈட்டுக் கோப்புகளுக்கு கொடுப்பனவு செய்வதற்குத் தேவையான அத்தியாவசிய ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 49/89 இன் கீழ் 82 கோப்புகள் நிறுவனத்திடம் உள்ளதுடன், தகவல்கள் கோரப்பட்ட போதிலும், அதற்கான பதில் கிடைக்கவில்லை. | |
| (இ) | 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் போது மரணம் மற்றும் காயமடைந்தவர்களுக்கான 6 கோப்புகளுக்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 30,000,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும், அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சொத்துகளுக்கான நட்டஈட்டுக் கட்டமைப்பின் கீழ் 128 அசையாச் சொத்துகள் மற்றும் 453 அசையும் சொத்துகள் தொடர்பான கோப்புகள் முழுமையற்றதாகவும், மதிப்பீட்டு அறிக்கைகள் இல்லாமலும் இருந்ததால், செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகை குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை. | போராட்டத்தில் உயிரிழந்த 06 நபர்களுக்காக பொது நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் பிரிவினால் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 04 நபர்களுக்காக கௌரவ நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாகக் கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை. அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன. மிகச் சில கோப்புகளுக்கு மதிப்பீட்டு அறிக்கைகள் இருந்தபோதிலும், பெரும்பாலான கோப்புகளுக்கு மதிப்பீட்டு அறிக்கைகள் இல்லாததால், செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பிட முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். | நட்டஈட்டுக் கோப்புகள் தொடர்பான ஆவணங்களை விரைவாகப் பூர்த்தி செய்து நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வழங்கப்பட்ட போதிலும், பயனாளிகளுக்குக் காசோலைகள் வழங்கும் நேரத்தில் புதுப்பிக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், அந்தச் செயன்முறை சரியாக நிறைவேறவில்லை. 2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, நட்டஈட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட காசோலைகளில் ரூபா 38,922,823 பெறுமதியான 292 காசோலைகளில் தகவல்கள் பிழையாக இருந்ததால் வங்கியினால் மதிப்பிழப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த காலாவதியான காசோலைகளுக்கான நட்டஈட்டுத் தொகையில் ரூபா 35,164,860 மீண்டும் அதே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதோடு, அதில் ரூபா 7,312,963 நிலுவைப் பட்டியலில் இருந்த மேலும் 36 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இதனால், புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நட்டஈடு வழங்கும் செயன்முறை மேற்கொள்ளப்படாததால், நட்டஈடு வழங்கும் வினைத்திறன் குறைந்த மட்டத்தில் இருந்தது. | பயனாளிகளுக்கு நிதி மானியங்களை வழங்குவதற்கு முன், அவர்களின் கணக்குத் தகவல்களைப் புதுப்பித்துப் பெற எங்களால் முடிந்த போதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பயனாளிகளின் தற்போதைய முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியாமை மற்றும் கணக்குகள் செயலிழந்து காணப்படுதல் போன்ற காரணங்களால் எங்கள் செயன்முறை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றிகரமாக இருக்காது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் எண்ணிக்கையின்படி, காலாவதியான ரூபா 38,922,823 இல், ரூபா 35,164,860 ஐ மீண்டும் அதே பயனாளிகளின் புதுப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்க முடிந்தது. | சம்பந்தப்பட்ட பயனாளிகளின் புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளைப் பரிந்துரைக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | இந்த அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் வருடாந்த அறிக்கையில் பிரசுரிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், 2025 ஒக்டோபர் 08 ஆம் திகதிய திருத்தப்பட்ட பதிலின் படி, | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆர்ப்பாட்டத்தினால் சேதமடைந்த சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பான அவதானிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | | |
| (i) | 2022 திசெம்பர் 06 ஆம் திகதிய அமப/22/1939/601-008-1 இலக்கமுடைய அமைச்சரவை முடிவுக்கு அமைய, ஆறு நிபுணத்துவத் தொழில் வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டலின் ஊடாகப் புதிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தின் பிரதம மதிப்பீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி, முதல் மதிப்பீடுகள் தொடர்பான சொத்துக்களுக்கு மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதில், ஆரம்ப மதிப்பீட்டிற்கும், இரண்டாம் அல்லது மூன்றாம் மதிப்பீடுகளின் பெறுமதிகளுக்கும் இடையில் 10 வீதத்திலிருந்து 72 வீதம் வரையிலான வீச்சுக்குள் 39 சந்தர்ப்பங்களில் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய PS/CM/PCA/61/2022 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று முன்மொழிவுகளில், மூன்றாவது முன்மொழிவிற்காக “மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் முற்பணம் / மொத்தத் தொகையைச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிடுதல்” என்பது முன்வைக்கப்பட்டது. அந்த முன்மொழிவு உட்பட ஏனைய யோசனைகள் 2022 நவம்பர் 28 ஆம் திகதிய 22/1939/601/008-1 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த சொத்துக்களை மதிப்பீடு செய்வது இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பணி என்றும், மதிப்பீட்டுப் பெறுமதிகளின் மாற்றம் அல்லது மீள் மதிப்பீடு செய்வதற்கான காரணங்கள் குறித்து அறிக்கையிடுவது கூட இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணி அல்ல என்றும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிறுவனங்களுக்கிடையேயான சிறந்த ஒருங்கிணைப்பு மூலம் இந்த மதிப்பீடுகளை மேலும் சரியாகவும் வெளிப்படையாகவும் மேற்கொண்டு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், கணக்காய்வு அறிக்கைகளுக்குச் சரியான பதில்களை உரிய காலத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2022 மே 09 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில், ஆர்ப்பாட்டம் தொடர்பான நட்டஈட்டுக் கொடுப்பனவுச் | வர்த்தக நிலையங்களுக்கான கொடுப்பனவுகள் வீடுகளுக்கான கொடுப்பனவுகளுக்குப் பின்னரே செலுத்தப்பட்டுள்ளன. தேவைகளின் முன்னுரிமையின்படி, வீட்டிற்கு | சேதமடைந்த சொத்துக்களை மதிப்பிடுவதற்கு முறையான அளவுகோல்களை அறிமுகப்படுத்தி, |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முறையின் போது வர்த்தக வளாகங்களுக்கு நட்டஈடு வழங்குவதில், மதிப்பீட்டு அளவுகோல்களாக சிறு அளவிலான வர்த்தகங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத சிறு அளவிலான வர்த்தகங்கள் எனும் வர்த்தக வகைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இழப்பீட்டுக்கான அலுவலகம் சிறு அளவிலான வர்த்தகங்களுக்கு ஒரு வரைவிலக்கணத்தையோ அல்லது அளவீட்டுக் குறியீடுகளையோ பயன்படுத்தாமல், 2024 ஆம் ஆண்டில் ரூபா 77,215 முதல் ரூபா 5,134,350 வரையான வீச்சுக்குள் 14 வர்த்தக வளாகங்களுக்காக ரூபா 12,416,190 நட்டஈடு செலுத்தியிருந்தது. இதில், ரூபா 2,239,450 தொகை 02 தனியார் கம்பனிகளுக்கும், ரூபா 2,729,665 ொதகை 05 தனிநபர் வர்த்தகங்களுக்கும், ரூபா 5,134,350 கட்டுமானத்தில் இருந்த ஒரு ஹோட்டல் வளாகத்திற்கும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் உள்ளடங்கும். | ஏற்பட்ட சேதமானது துரிதமாக நட்டஈடு செய்யப்பட வேண்டிய சொத்தாகக் கருதப்பட்டது. கோப்புகளில் இருந்த ஆவணங்களின்படி, வீடுகளுடன் பேணப்பட்ட பணிமனைகள் மற்றும் காப்புறுதியினால் ஈடு செய்யப்படாத, வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த, கட்டுமானத்தில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. சொத்து நட்டஈடு வழங்கும் போது, சிறு, நடுத்தர, பாரிய, தனிநபர் வர்த்தகங்கள் என வகைப்படுத்தாமல், மேலே குறிப்பிட்ட கொள்கை வழிகாட்டல் விதிகளுக்கு அமைய, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. | அதன்படி நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நட்டஈட்டுக் கொடுப்பனவுச் செயன்முறை தொடர்பான மாதிரிப் பரிசோதனையின்போது, ஒரே நபருக்கு, மரணம் அல்லது காயமடைந்த சம்பவமாகக் கருதி முதல் நட்டஈட்டுக் கொடுப்பனவும், காணாமல் போதல் எனக் கருதி இரண்டாம் நட்டஈட்டுக் கொடுப்பனவும் என, மூன்று நபர்களுக்கு மேலதிகமாக ரூபா 600,000 செலுத்தப்பட்டிருந்தது. | அந்த இரண்டு கொடுப்பனவுகளும் கொள்கை ரீதியான முடிவுகளின் அடிப்படையில் இரண்டு வெவ்வேறு நிவாரணத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாகும். முதல் கொடுப்பனவு, மரணம் மற்றும் காயங்களுக்கான நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவாகும். இரண்டாவது கொடுப்பனவு, காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் | நட்டஈடு வழங்கும் போது அதிக வெளிப்படைத்தன்மையுடன் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விசாரணைகள் நடத்தப்பட்டு, அந்தக் குடும்பங்களின் புனர்வாழ்வுக்காக புனர்வாழ்வு மானியம் வழங்குமாறு இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டதற்கிணங்க, அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் நட்டஈட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு மானியம் வழங்கும் போது, ஏற்கனவே செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகையைக் கழித்துக் கொடுப்பதற்கான கொள்கை ரீதியான தீர்மானம் எதுவும் பெறப்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். | |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் முதல் கணினி கட்டமைப்பு 2016 செப்தெம்பர் 16 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட்ட போதிலும், அன்றிலிருந்து அலுவலகத்தின் அத்தியாவசியப் பதவியான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்கவில்லை. மீளாய்வாண்டின் ஜூலை 12 ஆம் திகதி இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் ஒரு தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அங்கீகரிக்கப்படவில்லை. | அந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை 2025 பெப்ரவரி 18 ஆம் திகதியிடப்பட்டு நீதி அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2025 மார்ச் 26 ஆம் திகதியிடப்பட்டு, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீண்டும் திருத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 2025 ஏப்ரல் 23 ஆம் திகதியிடப்பட்டுத் திருத்தப்பட்ட நடைமுறை நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆட்சேர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | நிறுவனத்தின் வெற்றிடங்களை அடையாளம் கண்டு, முறையான அங்கீகாரத்தின் பேரில் விரைவாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 76 ஆக இருந்தபோதிலும், அன்றைய தினம் 8 பதவிகளில் 28 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. | வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு அனுமதி கோரி அமைச்சு, முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் பிரதமர் மீளாய்வுக் குழுவிற்குப் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அரச செலவு முகாமைத்துவச் சுற்றறிக்கைகள் மற்றும் 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக, சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெற முடியவில்லை. அங்கீகாரம் கிடைத்தவுடன் 2025 ஆம் ஆண்டில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான வாய்ப்பு உள்ளது. | பயனுள்ள சேவை மட்டத்தைப் பேணுவதற்காகப் பணியாளர்களை மீளாய்வு செய்து, அதன்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த வரைவு அறிக்கையில் குறைந்தபட்சம் வெளிப்படுத்தப்பட வேண்டிய அங்கங்களான நிறுவனத்தின் தலைவர் கருத்துரை, பணிப்பாளர் சபை அறிக்கை மற்றும் கடந்த அண்மித்த 10 வருடங்களின் நிறுவனத்தின் நிதிநிலைமை பற்றிய தகவல்கள் என்பன உள்ளடக்கப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 01/2021 இலக்கமுடைய அரச சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காணாமல் போனவர்களுக்கான நட்டஈட்டுத் திட்டம் தவிர்ந்த வேறு எந்தவொரு நட்டஈட்டுத் திட்டமும் 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி செயற்படுத்தப்பட்ட இரண்டாவது கணினி முறைமையில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் | நட்டஈட்டுக் கட்டமைப்புகள் தொடர்பான முதல் முறைமையின் தரவுகளை இரண்டாவது கணினி முறைமைக்கு மாற்றும் பணிகள் 2025 மே 04 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தற்போது தரவுகளைப் | கணினி முறைமை தொடர்பான பணிகளை விரைவாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படவில்லை. அத்துடன், நட்டஈட்டுக் கட்டமைப்புகள் தொடர்பான முதல் முறைமையின் தரவுகள், இரண்டாவது கணினி முறைமைக்கு மாற்றும் (Data Migration) பணி இரண்டாவது கணினி முறைமை நிறுவப்பட்ட நாள் முதல் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. | பரிசோதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை இந்த மாதத்திற்குள் நிறைவு செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கணினி முறைமை தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்குள் அத்தியாவசிய பணியாளர்களின் பற்றாக்குறை இருந்தமையே இந்தப் தாமதங்களுக்குக் காரணம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். | |
| (ஆ) | 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட்ட ரூபா 10,819,625 பெறுமதியான கணினித் தரவு முறைமையானது, சர்வதேச குடியேற்ற அமைப்பின் (IOM) மானியமாகப் பெறப்பட்டிருந்தது. ஆனால், சொத்தின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்தக் கணினித் தரவு முறைமையை வழங்கிய நிறுவனத்திற்கும் இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கும் இடையில் இரு தரப்பினரும் இணக்கமடைந்த ஒப்பந்தம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததால், புதிய தரவு முறைமையின் பராமரிப்புப் பணிகள், நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் செயலிழப்புகள் தொடர்பாக இழப்பீட்டுக்கான அலுவலகம் எடுக்கும் நடவடிக்கைகள் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்தத் தரவு முறைமை சர்வதேச குடியேற்ற அமைப்பின் (IOM) மானியமாகப் பெறப்பட்டதால், தரவு முறைமையின் பராமரிப்புப் பணிகள், நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் செயலிழப்புகள் தொடர்பாக சர்வதேச குடியேற்ற அமைப்பிற்கும் (IOM) Iterminal Technologies நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், எங்கள் முதல் முறைமையின் தரவுகளை இரண்டாவது கணினி முறைமைக்கு மாற்றும் பணிகள் முழுமையாக நிறைவடைந்த பிறகு Iterminal Technologies நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட உள்ளது. அதற்கான வரைவு தற்போது எங்களிடம் கிடைத்துள்ளது. | முறையான ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 இன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 40(1) இன் பிரகாரம், அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் | இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி சேவையில் இருந்து விலகியுள்ளார். அந்த | உள்ளகக் கணக்காய்வு வெற்றிடத்தை நிரப்ப விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணிகளை மேற்கொள்வதற்காக, அதன் கட்டுப்பாட்டுச் சபையினால் நியமிக்கப்படும் ஒரு சொந்த உள்ளகக் கணக்காய்வாளர் இருக்க வேண்டும். இருப்பினும், 2024 ஆகஸ்ட் 29 ஆம் திகதி முதல் அலுவலகத்தின் பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | வெற்றிடமான பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை வழங்குமாறு 2024 ஆகஸ்ட் 02 ஆம் திகதியிடப்பட்டு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதற்கான அங்கீகாரம் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அங்கீகாரம் கிடைத்தவுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் 2024 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்படி, மூழுநட்டஈட்டுக் கொடுப்பனவுச் செயன்முறைக்காக ரூபா 2,483 மில்லியன் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, பௌதீக முன்னேற்றத்தைச் பரிசோதித்தபோது, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன: | | |
| | (i) 2024 ஆம் ஆண்டில் மரணம், காயங்கள் மற்றும் காணாமல் போனவர்கள் சார்பாக மதிப்பிடப்பட்ட செலவை விட ரூபா 4.26 மில்லியன், அதாவது 85 வீதம் அதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.<br><br>(ii) காணாமல் போனவர்களுக்கான நட்டஈடு | ஆண்டின்போது மாதந்தோறும் பணம் கிடைத்த பிறகு, பூர்த்தி செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோப்புகளின் அடிப்படையில், மனிதாபிமான மற்றும் நிறுவனத் தேவைகளின் பேரில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கப்படுகிறது. அதன்படி, ஆண்டில் நிதி மானியங்களுக்காக (நட்டஈட்டுக் கொடுப்பனவுகள்) வழங்கப்பட்ட | வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைச் சரியாகத் தயாரித்து, நிதி ஏற்பாடுகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக, 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், அதில் ரூபா 310 மில்லியன் பயன்படுத்தப்படாமல்இருந்தது. இது ஒதுக்கப்பட்ட தொகையில் 31 வீதமாகும். | ஒதுக்கீட்டு வரம்பிற்குள், நிறுவனத் தேவை மற்றும் உயர்மட்ட நிர்வாகத்தின் இணக்கப்பாட்டின் பேரில் பல்வேறு நட்டஈட்டு முன்மொழிவு திட்டங்களுக்கு இடையே நிதி மாற்றீடு செய்யப்படுகிறது. | |
| | (iii) 2022 நிகழ்வு தொடர்பான நட்டஈட்டு மானியத்திற்காக, 2024 ஆம் ஆண்டில் ரூபா 600 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், அதில் ரூபா 227 மில்லியன் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இது ஒதுக்கப்பட்ட தொகையில் 38 வீதமாகும். | ஆண்டின்போது மாதந்தோறும் பணம் கிடைத்த பிறகு, பூர்த்தி செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோப்புகளின் அடிப்படையில், மனிதாபிமான மற்றும் நிறுவனத் தேவைகளின் பேரில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கப்படுகிறது. அதன்படி, ஆண்டில் நிதி மானியங்களுக்காக (நட்டஈட்டுக் கொடுப்பனவுகள்) வழங்கப்பட்ட ஒதுக்கீட்டு வரம்பிற்குள், நிறுவனத் தேவை மற்றும் உயர்மட்ட நிர்வாகத்தின் இணக்கப்பாட்டின் பேரில் பல்வேறு நட்டஈட்டுத் திட்டங்களுக்கு இடையே நிதி மாற்றீடு செய்யப்படுகிறது. | வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைச் சரியாகத் தயாரித்து, நிதி ஏற்பாடுகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (iv) சொத்துச் சேதங்களின் கீழ், அரச உத்தியோகத்தர்களுக்கான நட்டஈட்டுக் கட்டமைப்பு ஊடாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 10,763,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் அதற்காக எந்தவொரு நிதி ஏற்பாடும் அடையாளம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | நிறுவனத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 2,588 மில்லியனாக இருந்தபோதிலும், உண்மையான செலவினம் ரூபா 2,145.14 மில்லியனாக இருந்தது. 52 செலவினத் தலைப்புகளில், 29 தலைப்புகளின் வரவுசெலவுத் திட்டச் செலவுக்கும் உண்மையான செலவுக்கும் இடையில் 20 வீதத்திலிருந்து 757 வீதம் வரையான வேறுபாடுகள் | வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பணிக்கொடைக்கும் உண்மையான செலவிற்கும் இடையிலான வேறுபாட்டிற்குக் காரணம், 08 உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகியமையாகும். இதில் 07 உத்தியோகத்தர்கள் 60 வயதை நிறைவு செய்வதற்கு முன்னர் | வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை மேலும் சரியாகத் தயாரித்து, நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணப்பட்டன. இதனால், வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் யதார்த்தமாகத் தயாரிக்கப்படாமல், ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. குறிப்பாக, பணிக்கொடை கொடுப்பனவுகள் மற்றும் கட்டிட வாடகைச் செலவுகளின் வரவுசெலவுத் திட்டச் செலவுக்கும் உண்மையான செலவுக்கும் இடையில் முறையே 758 சதவீதம் மற்றும் 543 சதவீதம் வரையான வேறுபாடு காணப்பட்டது.

விலகியதால், அவர்களை மதிப்பீட்டில் சேர்க்க எங்களால் முன்னறிவிக்க முடியவில்லை. கட்டிட வாடகைச் செலவுகளை மதிப்பிடும் போது, திறைசேரியினால் வழங்கப்பட்ட செலவினத் தலைப்பு வரம்புகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்டதால், உண்மையான செலவை விட குறைந்த பெறுமதி மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறும் வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குள்ளேயே வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், இந்த மாதாந்தக் கட்டிட வாடகைச் செலவு பிரதான அமைச்சினால் மீளச் செலுத்தப்படுவதால், நாங்களும் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அந்த மாதாந்த மீளச் செலுத்தலையும் கருத்தில் கொண்டோம்.